தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்/வேலைக்கு உணவு வழங்கும் திட்டம் – காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் – கெட்டுப்போன உணவு தானியங்களுக்கான மதிப்பீட்டுத் தொகையான ரூ.96,202.90–ஐ தள்ளுபடி செய்தல்.

---

**ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (சிஜிஎஸ்1) துறை**

அரசாணை (நிலை) எண்: 3 நாள்: 08.01. 08

படிக்கப்பட்டவை:

ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை–15, க.எண்.7217/04/ திட்டம் 2.2, நாள் 26.5.04.

*****

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் / வேலைக்கு உணவு வழங்கும் திட்டம் ஆகியவற்றின் கீழ் 1981 – 82 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்யப்பட்ட தானியங்கள் அந்த ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கிடங்கு இல்லாததால், பல்வேறு இடங்களில் வாடகை கட்டிடங்களில் உணவு தானியம் இருப்பில் வைக்கப்பட்டிருந்தது என்றும்; இத்திட்டம் துவங்கியதிலிருந்து வரப்பெற்ற உணவு தானியங்கள் மேற்கண்ட கட்டிடங்களில் விஞ்ஞானரீதியாக சேமிக்கக்கூடிய அளவுக்குமேல் பல மடங்கு வரப்பெற்றது என்றும்; திட்டம், ஆரம்பகாலத்தில் வேலைகள் துரிதமாக நடைபெறாமல் தேக்க நிலையில் இருந்ததால் வரப்பெற்ற உணவு தானியங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் முதலில் அடுக்கிய நிலையிலேயே இருந்தது என்றும்; மேலும் நவம்பர் 1985–ல் பலத்த மழையும் காற்றும் இருந்ததனால் கிடங்குகளில் மழைநீர் புகுந்து உணவுப் பொருட்கள் கெட்டுவிட்டன என்றும் தெரிவித்துள்ளார். வாடகைக்கு கிடைக்கப் பெற்ற கட்டிடங்கள் விஞ்ஞானரீதியான கிடங்குகளைப் போல் அல்லாமல், அதாவது, பூமியிலிருந்து நீர் உள்ளே புகாத அளவில் 4’ உயரமாக தார்ப்பாய் விரிக்கப்பட்டு கிடங்கின் மேல் கூரை நல்ல காற்றோட்டமாக உள்ளவாறு நல்ல உயரத்தில் அமையப்படவில்லை என்றும், உணவு தானியங்கள் பகுதி பகுதியாக இடையே காற்று புகும் அளவிலும் மேற்பார்வையாளர் சுற்றிப்பார்க்கும் வகையிலும் பூச்சிக்கொல்லி மருந்துகளை தெளிக்கும் வகையிலும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், உணவுப் பொருட்களை மீண்டும் எடுத்து இடம் மாற்றி மேல்மூட்டைகள், கீழ் மூட்டைகள் திருப்பி அடுக்க இயலாததாலும்; முதலில் வரப்பெற்று உள்ளே அடுக்கப்பட்ட மூட்டை முதலில் வழங்கி பின்னர் வரப்பெற்ற மூட்டைகளை நிறுத்தி வைக்க போதிய வசதி இல்லாததாலும்; உணவு பொருட்கள் மூட்டைகளின் அழுத்தத்தின் காரணமாகவும்; காற்றோட்டம் இன்மை காரணமாகவும் மனித உபயோகத்திற்கு பயன்படுத்த இயலாத நிலை ஏற்பட்டது என்றும்; பராமரிக்க தனியாக பணியாளர்கள் நியமிக்கப்படாததாலும் உணவுப்பொருள் மாவுப் பொருளாக மாறி எடை குறைவு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இதனை காஞ்சிபுரம் தர ஆய்வாளர் (Quality Inspector) அவர்களால் சரிபார்க்கப்பட்டபோது கீழே குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| அ) | மனித உபயோகத்திற்கு பயனில்லாத நிலையில் கெட்டுப் போன உணவு தானியங்கள் | அரிசி | 39.434 மெட்ரிக் டன் |
| | | கோதுமை | 15.000 மெட்ரிக் டன் |
| ஆ) | குறைவு காணப்பட்ட உணவு தானியங்கள் | அரிசி | 8.407 மெட்ரிக் டன் |

| | | | |
|---|---|---|---|
| | | கோதுமை | 43.847 மெட்ரிக் டன் |

2. மேலும் அரசு ஆணை(நிலை), எண்.280, ஊரக வளர்ச்சி (ஜேபி 1) துறை, நாள் 8.8.91–ன்படி உணவு தானிய சேமிப்பில் அதிகபட்சமான குறைபாடு ஓராண்டு சேமிப்பிற்கு, அரிசிக்கு 3.5% மற்றும் கோதுமைக்கு 3% அனுமதிக்கப்பட்டுள்ளது. தவிர, அனுமதிக்கப்பட்ட சதவீதத்திற்கு மேலாக குறைவுபட்ட தானியங்களின் மதிப்பு தொகையை இதற்குப்பொறுப்பான அலுவலர்களிடமிருந்து பிடித்தம் செய்யலாம் எனவும் தெரிவித்து கீழ்க்கண்டவாறு பரிந்துரை செய்துள்ளார்.

மதிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | தள்ளுபடி செய்ய வேண்டிய கெட்டுப்போன உணவு தானியங்களின் மதிப்பு | அரிசி | 39,434 மெ.டன் | ரூ.72952.90 |
| | | கோதுமை | 15,000 மெ.டன் | ரூ.23250.00 |
| | | மொத்தம் | | ரூ.96202.90 |
| 2) | அரசு விதிமுறைகளின் படி எடை குறைவுக்கான தானியங்களின் மதிப்பு | அரிசி | 8,407 மெ.டன் | ரூ.15552.95 |
| | | கோதுமை | 25,590 மெ.டன் | ரூ.39664.15 |
| | | மொத்தம் | | ரூ.55217.10 |
| 3) | இருப்பில் உள்ள குறைவு காணப்பட்டமைக்கு பொறுப்பானவர்களிடம் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை | கோதுமை | 18,257 மெ.டன் | ரூ.28298.35 |
| | | மொத்தம் | | ரூ.28298.35 |

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரது செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, உணவு தானிய இருப்பில், தானிய இருப்பு குறைவு காணப்பட்டமைக்குக் காரணமாக குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர்கள் மீது தமிழ்நாடு குடிமைப்பணி விதி 17 (ஆ) வின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுவிட்டதால், கனமழை காரணமாக காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் வாடகைக்கு எடுக்கப்பட்ட கிடங்கில் முறையான கிடங்கு வசதி இல்லாமல் கெட்டுப்போன உணவு தானியங்களுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.96,202.90/–யை (ரூபாய் தொன்னூற்றாறாயிரத்து இருநூற்று இரண்டு மற்றும் தொன்னூறு பைசா) தள்ளுபடி செய்யக் கோரும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்கலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 65445/ ஊ.வ/07 நாள் 19.10.07–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு செயலாளர்.